**புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2013**

---

புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கு, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2008 ஐனவரி 25 ஆந் திகதி வெளியிடப்பட்டு 1533/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மோட்டார் வாகனப் புகையைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டளையின் கீழ் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் (அத்தியாயம் 203) 29(ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிசார் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களற்ற கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிசார்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிசார்கூற்றுக்கள் பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிசார்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிசார்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிசார் கூற்றுக்களில் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிசார் நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் நடவடிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைக் காட்டுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

திறைசேரி உண்டியல் முதலீட்டின் மூலம் பெற வேண்டிய வட்டி ரூபா 44,246 குறைவாக கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| 2003 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க அரச சேவைகள் சேமலாப நிதிய நிதியத்தின் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான அரச சேவைகள் சேமலாப நிதிய கட்டளைச் சட்டத்தின் 2(4ஆ) (அ) (ஆ) உபபிரிவு | புகைப் பரிசோதனை நிதியத்தில் பணிபுரியும் 06 பேரிடமிருந்து அரச சேமலாப நிதிய உதவு தொகையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) பிரிவு | பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு உடனடித் தேவை கட்டுநிதியாக ரூபா 20,000 வழங்கப்படலாமெனினும், அவ்வரம்பை மீறி 10 உத்தியோகத்தர்களுக்கு 36 சந்தர்ப்பங்களில் முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டன. |
| (ii) நிதிப் பிரமாணம் 395 (இ) | ஒரு மாதம் முடிவுற்று அடுத்து வரும் மாதத்தின் 15 க்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை |

(iii) நிதிப்பிரமாணம் 396(ஈ)

வழங்கப்பட்டு வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் ரூபா 115,458 கூட்டுத் தொகையுடையதும் 6 மாதங்களைக் கடந்துவிட்டதுமான 8 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396(ஈ) க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2006 டிசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2 (ஆ) பந்தி

கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணம் மற்றும் ஏனைய பொறுப்புகள் யாவும் தீர்த்து வைக்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் மேலதிக பணம் தாமதமின்றி ஒருங்கிணைந்த நிதியத்திற்கு மாற்றஞ் செய்யப்படுதலும் மிகையாக உள்ள நிதி வெளி நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்யப்படின் அது முதிர்ச்சி அடைந்தவுடன் அதனை ஒருங்கிணைந்த நிதியத்திற்கு மாற்றஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும் ரூபா 190,909,921 கூட்டுத் தொகையுடைய திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரிப் பிணை முறி சம்பந்தமாக அதற்கிசைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டினது நிதியச் செயற்பாட்டினால் ஏற்பட்ட மிகை ரூபா 171,131,419 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 177,236,281 மிகை ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 6,104,862 குறைவு காணப்படுகின்றது. தேய்மானம் ரூபா 9,485,555 அதிகரித்தமையும் பாரியஊடக நிகழ்ச்சித்திட்டச் செலவினம் ரூபா 2,424,936 அதிகரித்தமையுமே இவற்றிக்கான முக்கிய காரணிகளாகும்

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஒவ்வொரு வாகனங்களினதும் வகைப்படுத்தலுக்கமைய பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வாகனங்களது எண்ணிக்கையில் 2013 ஆம் ஆண்டின்போது புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட வாகனங்கள் தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றது. (இந் நாட்டில் பதிவு செய்யப்பட்ட புதிய வாகனங்கள் ஓராண்டிற்கு புகைப் பரிசோதனைச் சான்றிதழைப் பெறுவதற்கான அவசியம் இன்மையால் 2012 டிசெம்பர் 31 வரை பதிவு செய்யப்பட்ட வாகனங்களது எண்ணிக்கையின் அடிப்படையில் இப்பகுப்பாய்வு அமைந்துள்ளது)

| | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வாகனங்களது மொத்த எண்ணிக்கை | 2013 ஆம் ஆண்டின்போது புகைப்பரிசோதனைச் சான்றிதழ்களைப் பெற்றிருந்த வாகனங்களது எண்ணிக்கை | 2013 ஆம் ஆண்டின்போது புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களைப் பெற்றிராத வாகனங்களது எண்ணிக்கை | தற்போதுள்ள வாகனங்களில் சான்றிதழ்களைப் பெறாதிருக்கும் வாகனங்களின் எண்ணிக்கை, சதவீதமாக |
|---|---|---|---|---|
| மோட்டார் சைக்கிள்கள் | 2,546,447 | 1,657,906 | 888,541 | 35 |
| முச்சக்கர வண்டிகள் | 766,784 | 698,851 | 67,933 | 09 |
| மோட்டார் கார்கள் | 499,714 | 358,392 | 141,322 | 28 |
| இரட்டைப் பயன்பாட்டிற்கான வாகனங்கள் | 280,143 | 265,391 | 14,752 | 05 |
| லொறிகள் | 323,776 | 205,456 | 118,320 | 37 |
| மோட்டார் கார்கள் / பஸ்கள் | 91,623 | 46,868 | 44,755 | 49 |
| மொத்தம் | 4,508,487 | 3,232,864 | 1,275,623 | |

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

(அ) வாகனங்களது மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு 28 சதவீதத்தைக் குறிக்கும் 1,275,623 வாகனங்கள் புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களைப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்டவாறு, சகல வாகனங்களுக்கும் புகைப் பரிசோதனைச் சான்றிதழ்கள் பெறப்பட்டிராமையால், போலியான புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களைப் பெற்றிருக்கக்கூடிய அல்லது புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களைப் பெற்றிராத வாகனங்கள் உள்ளனவா என்பதை இனங்காண்பதற்கு முறையான நடைமுறைகள் எதனையும் நிதியம் மேற்கொள்ளாதிருந்தது.

**4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது இரண்டு எம்பீயென்ட் எயார் குவலிட்டி மொனிடரிங் ஸ்டேஷன்ஸ் (Ambient Air Quality Monitoring Stations) மற்றும் இரண்டு எயார் குவலிடி டிஸ்பிளே போர்ட் (Air Quality Display Board) என்பவற்றை வழங்குவற்கான கூறுவிலைக் கோரல்கள் 3 புதினப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டமை. தொடர்பாக ரூபா 70,224 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், இப் புதினப் பத்திரிகை அறிவித்தல்களில் திகதி தவறாகக் குறிப்பிடப்பட்டமையால் மீண்டும் அவற்றைப் பிரசுரிப்பதற்கென ரூபா 20,832 செலவிடப்பட்டிருந்ததுடன், 2014 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவிலும் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்தன.

(ஆ) புகைப் பரிசோதனை நிலையங்களைப் பரிசிலித்தல், வீதியில் செல்லும் வாகனங்களில் புகைப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் நடைபெற வேண்டுமாயினும் அவ்வாறு நடைபெறவில்லை.

## 4.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சுற்றாடல் மாசடைவதற்கு ஏதுவான வாகனங்களது புகையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் புகைப்பரிசோதனை நிதியம் செயற்பட்டபோதும், அதன் நோக்கம் போதியளவு நிறைவேறியதா, இல்லையா என்பதை உறுதி செய்வதற்கு இந் நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்குவதற்கு முன்பிருந்த நிலைமை மற்றும் அமுலாகியதன் பின்னரான நிலைமை என்பன தொடர்பாக ஒப்பிட்டு பார்க்க கூடியதான சுற்றாடல் தரவு அடிப்படையில் முறையான பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) இந் நிதியம் ஆரம்பமாகிய 2008 நவம்பர் 17 முதல் 2013 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியின்போது புகைப் பரிசோதனைக் கட்டணமாக இரு கம்பனிகளால் அறவிடப்பட்ட கட்டணத்தில் நூற்றுக்குப் பத்து வீதமான ரூபா 522,127,270 நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டபோதும், இரு கம்பனிகளாலும் பரீசீலனைக்குள்ளான சகல மோட்டார் வாகனங்களுக்குரிய புகைப் பரிசோதனைக் கட்டண அறவீடுகளில் நிதியத்தின் பங்கு சரிவர அனுப்பி வைக்கப்பட்டதா இல்லலையா என்பதை உறுதி செய்வதற்கு நிதியத்தில் குறிப்பாக எதுவித நடைமுறைகளும் செயற்படுத்தப்படவில்லை.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின்போது நிதியம் நடாத்திய 4 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின்போது ரூபா 668,348 உபசரிப்புக்கென செலவிடப்பட்டிருந்தது. விலைப்பட்டியலுக்கமைய 795 உத்தியோகத்தர்களுக்கு உணவு வழங்கப்பட்டிருந்தபோதும், வருகை இடாப்பின் பிரகாரம் பங்குபற்றிய உத்தியோகத்தர்களது எண்ணிக்கை 644 ஆகவிருந்தது. இதற்கமைய, பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு பெறாத 151 உத்தியோகத்தர்களுக்கு உணவு வழங்கியமைக்கு ரூபா 126,944 செலவிடப்பட்டிருந்தது.

## 5. வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

நிதியத்தின் எட்டு செலவின விடயங்களில் வரவு செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றுக்கிடையே நூற்றுக்கு 25 முதல் 95 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவின. வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அவ்வப்போது மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வரவு, செலவுத் திட்டம்
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு